செ.வெ.எண்: 834 நாள்: 07.12.2019

## 2018 -க்கான கொடிநாள் வசூலில் புதுக்கோட்டை மாவட்டம் இலக்கினை விட அதிக நிதி வழங்கி சாதனை.

## 2019 -க்கான கொடி நாள் வசூலினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து தகவல்.

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் இன்று (07.12.2019) கொடி நாள் வசூலினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7-ஆம் நாள் படைவீரர் கொடிநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதடினப்படையில் இன்றையதினம் (07.12.2019) புதுக்கோட்டை மாவட்டத்தில் கொடி நாள் வசூலினை உண்டியலில் பணம் செலுத்தி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த கொடிநாள் நிதிவசூல் மூலம் வரும் நிதியினை முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களை சார்ந்தோர்கள் நலனுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டிற்கு (07.12.2018 முதல் 06.12.2019) வரை ரூ.98.32 இலட்சம் கொடிநாள் நிதிவசூல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.1.01 கோடி நிதி வசூல் செய்து இலக்கினை விட அதிகமாக கொடிநாள் நிதி வழங்கி சாதனை புரியப்பட்டுள்ளது. இதன் வசூல் சதவீதம் 103.35 % ஆகும். மேலும் 2019 ஆம் ஆண்டிற்கு (07.12.2019 முதல் 06.12.2020) வரை புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.1,08,15,00 மதிப்பில் கொடிநாள் நிதி வசூல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவரும் அதிகமாக நிதிவழங்கி கொடிநாள் நிதி இலக்கினை அடைய ஒத்துழைப்பு நல்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் படைவீரர்கள் நல அலுவலர் திருமதி.செண்பகவள்ளி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**